24.02.2026

OS No: 564/2019

பி.வா.சா. 1 - ராமையா த/பெ. கருப்பையா

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் குடியிருக்கும் கிராமம் செங்குளிப்பட்டி என்றால் சரிதான். 1ம் முதல் 4 மற்றும் 6 பிரதிவாதிகளும் செங்குளிப்பட்டி என்றால் சரிதான். என்னை தவிர மற்ற பிரதிவாதிகள் சாட்சிகளாக வரவில்லை என்றால் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார்கள் தற்போது வரை அவர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை. எனது ஊரில் இருந்து ஊத்திக்குளம் எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் இடைவெளியின்றி சேர்ந்தார் போல் தான் எனது ஊரும் ஊத்திக்குளமும் உள்ளது. செங்குளிப்பட்டி மற்றும் ஊத்திக்குளம் இடையே 3 கி.மீ தொலைவு உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 என்ன ஆவணம் என எனக்கு தெரியுமா என்றால் தெரியும் SLR ஆவணம் ஆகும். மேற்படி SLR ஆவணம் எந்த வருடம் ஏற்பட்டது என்றால் 1971ம் வருடம் ஏற்பட்டது. மேற்படி SLR ஆவணத்தில் என்ன சர்வே எண் உள்ளது என்றால் 419 உள்ளது. மேற்படி SLR ஆவணத்தில் எவ்வளவு விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 1.41.05 ஹெக்டேர்ஸ் ஆகும். மேற்படி SLR ஆவணத்தில் கண்ட மேற்படி சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் கோவில் பெயரிலும் எங்களது பங்காளி பெயரிலும் உள்ளது. மேற்படி SLR ஆவணத்தில் கோவிலுக்கு என எவ்வளவு விஸ்தீரண இடம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 0.55.5 ஹெக்டேர்ஸ் ஆகும். பங்காளிகள் என நான் குறிப்பிடும் நபர்களின் பெயர் என்ன என்றால் நல.வெள்ளைசாமி, நல.ஆ.தேவன்அம்பலம், மு.கருப்பையா ஆகியோர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி நல.வெள்ளைசாமி எத்தனை வருடத்திற்கு முன் இறந்தார் என்றால் 30 வருடத்திற்கு முன் இறந்தார். மேற்படி நல.வெள்ளைசாமிக்கு வாரிசுகள் யார் என்றால் காசிவிஸ்வநாதன், வடிவேல், கரு.முத்தையா ஆகிய 1, 2 மற்றும் 6 பிரதிவாதிகள் வாரிசுதாரர்கள் ஆவார்கள். நல.ஆ.தேவன்அம்பலம் என்பவரின் வாரிசு யார் என்றால் 3 பிரதிவாதி தே.உடையார் ஆவார். மு.கருப்பையா என்பவரின் வாரிசு யார் என்றால் வடிவேல், கருப்பையா,

சேவுகபெருமாள், ராமையா ஆகியோர் வாரிசுகள். மேற்படி வாரிசுதாரர்கள் அனைவரும் எங்கு உள்ளார்கள் என்றால் செங்குளிப்பட்டியில் உள்ளார்கள். எனது நிரூபணவாக்குமூலத்தில் வாதிகள் ஐயனார் முத்தையா கோவிலுக்கு பணி செய்பவர்கள் இல்லை என சொல்லும் சங்கதி குறித்து நிரூபித்திட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஐயனார் முத்தையா கோவில் ஒரே கோவிலாக உள்ளதா அல்லது வெவ்வேறு கோவிலாக உள்ளதா என்றால் மூலவர் சேவுகபெருமாள் ஐயனார், வெளியே இருப்பவர் முத்தையா ஆவார். எனது நிரூபணவாக்குமூலத்தில் சேவுகபெருமாள் என பெயர் எதுவும் குறிப்பிடவில்லை என்றும் ஐயனார் என்று மட்டும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கோவிலானது கிழமேலாக 15 அடி அளவில் இருக்கும். மேற்படி கோவிலானது தென்வடல் 8 அடி அளவில் இருக்கும். தாவா கோவிலானது மண்சுவராக உள்ளதா அல்லது கட்டிடமாக உள்ளதா என்றால் மண்சுவராக அமைக்கப்பட்டு ஓலைக்கூரையாக வேயப்பட்டுள்ளது. ஓலைக்கூரை எத்தனை வருடங்களாக உள்ளது என்றால் தற்போதைய வருடத்திலிருந்து 50, 60 வருடங்களுக்கு முந்தி இருக்கிறது, 200 வருடங்களாக உள்ளது. தற்போது வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் தாவா கோவில் எவ்வாறு உள்ளது என்றால் மண்சுவருடன் கல்லுகால்கள் ஊண்டப்பட்டு ஓட்டு கூடாரம் போடப்பட்டுள்ளது. மேற்படி கோவிலில் ஓட்டு கூடாரத்திற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் இல்லை. மேற்படி கோவிலில் செங்குளிப்பட்டி கிராமத்தை சேர்ந்த நாங்கள் எத்தனை முறை சென்று விளக்கு ஏற்றுவோம் என்றால் கோவிலில் விளக்கை ஏற்றும் பணி செய்வதற்காக ஆட்களை நியமித்துள்ளோம், அவர் தான் விளக்கை ஏற்றுவார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு கால அவகாசம் கோரி வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.02.24 15:45:16 +0530